**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No. 391/2022**

**Deposition of witness of Plaintiff – P.W.2(செல்வராஜ்)**

**23.1.2024.**

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்துக்கள் கோவிந்தசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு மொத்தம் 5 பிள்ளைகள். அதில் செல்வி என்ற மகள் இறந்துவிட்டார் என்றால் அவ்வாறு கேள்விபட்டேன். செல்விக்கு 2 பிள்ளைகள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வாதி, பிரதிவாதிகள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறேன். 2ம் பிரதிவாதி கணேசன் என்பவர் நீண்ட காலமாக மலேசியாவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி முருகன் கோயம்புத்துார் சென்றுவிட்டு அடிக்கடி ஊருக்கு வருவார். கோவிந்தசாமியின் மகள் மலர்விழி குடுமியான்மலையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். கோவிந்தசாமி இறந்த பிறகு அவரது வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. கோவிந்தசாமியின் சொத்துக்கள் அவரது வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் வாதி எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் 78 சென்ட் கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்துபோடவில்லை பத்திர பதிவிற்கும் செல்லவில்லை. கிரையம் பேசிய விவரம் தெரியும். கிரையம் பேசிய சமயத்தில் நானும் இருந்தேன். கிரைய சமயத்தில் அனைத்து பாகஸ்த்தர்களையும் அழைத்து பேச நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமி காலத்தில் இருந்து தாவா சொத்தில் வாதி விவசாயம் செய்து கொடுப்பார் என்றால் சரிதான். கோவிந்தசாமியின் இதர வாரிசுகள் சம்மதம் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்பதற்கு ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் விவசாயம் செய்து கொடுத்து வந்ததை சாதகமாக பயன்படுத்தி 1ம் பிரதிவாதியை ஏமாற்றி கோவிந்தசாமியின் இதர வாரிசுகளுக்கு தெரியாமல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் பற்றி தெரிந்து தாவா சொத்தை பிரதிவாதிகள் கைபற்றி அவர்கள் தான் நாளது தேதியில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றும் வாதி அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் கூட்டுறவு வங்கியில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் பணம் பெற்று கொண்டு சாட்சியம் அளிப்பதை வழக்கமாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாதி தயார் செய்த நிரூபண வாக்குமூலத்தை வைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை